# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



## தாவீது

## ராஜா (பாகம் 1)

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Lazarus

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

வாலிபனான தாவீது இடமாறிக்கொண்டேயிருந்தான். சவுல் ராஜா அவனை கொலை செய்ய விரும்பினான். தாவீது வனாந்திரத்தில், ஒரு பெரிய கெபிக்குள் தன்னை பின்பற்றி வந்த நானூறு பேருடன் வாழ்ந்து வந்தான்.



சில வேளைகளில், சவுலின் போர்ச்சேவகர்கள் அவனை ஏறக்குறைய கண்டுபிடித்தார்கள். ஆனால் தாவீது இடமாறிக்கொண்டே இருந்தான்.



சவுலின் வேலைக்காரன் தோவேக்கு ஆசாரியர்கள் தாவீதை தப்ப வைத்தார்கள் என்று தெரிவித்தான். சவுல் அவர்களைக் கொலை செய்யக் கட்டளையிட்டான். ஆனால் தோவேக்கு மாத்திரமே அதை செய்ய துணிந்தான்! அவன் எண்பத்தைந்து ஆசாரியர்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் தன்னுடைய வாளாள் மிகக் கொடூரமாக கொலை செய்தான். அது ஒரு துஷ்டகரமான செயல்.





ஒருநாள், சவுல் தாவீதை அதிகமாக தேடி, தாவீதும் அவனுடைய மனிதர்களும் தங்கியிருந்த குகைக்குள் தெரியாமல் நுழைந்து விட்டான். சவுல் தனியாக இருந்தான்.

குகைக்குள்ளே,
தாவீதினால்
மிக எளிதாக
சவுலை
கொலை
செய்யமுடியும்.



பதிலாக, தாவீது சவுலின் அருகாமையில்
சென்று தன்னுடைய கூர்மையான
வாளால் சவுலின் வஸ்திரத்தின் ஒரு
நுனியை அருத்தெடுத்தான்.


சவுல் சென்றபின், தாவீது அவனை
கூப்பிட்டான். "உம்முடைய
சால்வையின் தொங்கலை
அறுத்துக்கொண்டேன்;
ஆனால்  உம்மைக் கொன்றுபோடவில்லை.
என் கையிலே பொல்லாப்பும் துரோகமும்
இல்லை என்று உமக்கு தெரியட்டும் ..."

தாவீதை புண்படுத்தியதற்காக சவுல் மன்னிப்பு கேட்டான். ஆனால், சீக்கிரத்தில் அவனுடைய பழைய கோபம் வந்தது. மற்றும் மூவாயிரம் பேரைக் கொண்ட படையை உருவாக்கி தாவீதை கொலை செய்ய வகை தேடினான். ஓரிரவு, படை தூங்கிக்கொண்டிருக்கும் போது, தாவீதும் அவனுடைய போர்சேவகனான அபிசாயும், சவுல் தங்கியிருந்த இடத்திற்குள் வந்து விட்டனர். சவுலோ தூங்கிக் கொண்டிருந்தான்.





"தேவன் இன்று உம்முடைய
சத்துருவை உம்முடைய
கையில் ஒப்புக்கொடுத்தார்,"
என்று அபிசாய்
முனுமுனுத்தான்.
"தயவுசெய்து நான் ஈட்டியை
கொண்டு ஒரே தடவையாக
தரையோடு
உருவக்குத்தட்டும்:
இரண்டாம் முறை நான்
குத்த வேண்டிய
அவசியமிருக்காது."



தாவீதோ மறுத்துவிட்டான். சவுலின் ஈட்டியையும், செம்பையும், அவன் எடுத்துக்கொண்டு அங்கிருந்து சென்று விட்டான். அடுத்த மலைக்குப் போய், தாவீது சவுல் கேட்கும்படியாக கூப்பிட்டான். ஒருமுறை கூட தாவீது தன்னை கொலை செய்ய தருணம் கிடைத்தும் விட்டுவிட்டான் என்பதை சவுல் கண்டான். இன்னொரு முறை சவுல் தாவீதிடம் தன்னுடைய தவறுக்காக மன்னிப்பு கேட்டான். ஆனால் சவுலின் வார்த்தைகளை நம்ப முடியாதென்று தாவீதுக்குத் தெரியும்.



இந்த நேரத்தில் சாமுவேல் மரணமடைந்து விட்டான். சவுலை முதலாவது ராஜாவாகவும், பின்பு இஸ்ரவேலின் மேல் தாவீதை ராஜாவாகவும் அபிஷேகம் பண்ணச் சொன்ன தேவனின் தீர்க்கத்தரிசி இந்த சாமுவேல் ஆவான். பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலை தாக்கிய போது, தேவன் தடை செய்த, ஒரு தவறான காரியத்தை சவுல் செய்தான்.

சாமுவேலை மரித்தவர்களிடத்திலிருந்து எழுப்பும்படி சவுல் ஒரு பெண்ணுக்கு கட்டளையிட்டான். அந்த இரவு, சவுலுக்கு ஒரு செய்தி கிடைத்தது.



"... தேவன் உன்னைவிட்டு விலகி, உனக்கு சத்துருவாயிருக்கிறார். ... ராஜ்ஜியத்தை உன் கையிலிருந்து பரித்து அதை உன் தோழனாகிய தாவீதுக்குக் கொடுத்து விட்டார். நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள்; இஸ்ரவேலின் பாளையத்தையும் கர்த்தர் பெலிஸ்தியரின் கையில் ஒப்புக்கொடுப்பார்." அதைக்கேட்ட போது, சவுல் பயத்திலே சரிந்து போனான்.



பெலிஸ்தியர் இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம் செய்தார்கள், இஸ்ரவேல் மனிதர் தப்பி ஓடிப்போனார்கள். பெலிஸ்தியர் சவுலின் குமாரர்கள் தாவீதின் நல்ல சிநேகிதனான யோனத்தானையும், சேர்த்துக் கொலை செய்தார்கள்.



வில்வீரர்களினாலே சவுல்
மிகவும் காயப்பட்டான். அவன்
தன்னுடைய ஆயுததாரியை
நோக்கி, "அந்த விருத்தசேதனம்
இல்லாதவர்கள் வந்து, என்னைக்
குத்திப்போட்டு, என்னை
அவமானப்படுத்தாதபடிக்கு,
நீ உன் பட்டயத்தை உருவி,
என்னைக் குத்திப்போடு,"
என்றான். அவனுடைய
ஆயுததாரி மிகவும்
பயப்பட்டதினால், அப்படிச்
செய்யமாட்டேன் என்றான்.
அப்பொழுது சவுல் பட்டயத்தை
நட்டு அதின் மேல் விழுந்தான்.





சவுலையும் அவனுடைய
குமாரர்களின் உடல்களையும்
கண்ட போது, பெலிஸ்தியர்
அவர்களின் உடல்களை தாங்கள்
கைப்பற்றிய இஸ்ரவேல்
பட்டணத்தின் சுவர்களிலே
கட்டிப்போட்டார்கள். அப்போது
இஸ்ரவேலில் சில தைரியமான
மனிதர்கள் அந்த உடல்களை
மீட்டு, வீட்டிற்கு எடுத்துச்
சென்று, அதை எரித்து
மீந்ததை அடக்கம்
பண்ணினார்கள்.



தாவீது இந்த
துக்ககரமான செய்தியைக்
கேட்டு, சவுலுக்காகவும்
அவன் குமாரன்
யோனத்தானுக்காகவும்
மற்றும் தேவனுடைய
ஜனங்களுக்காகவும்
துக்கித்து, அழுது
சாயங்காலம் வரை
உபவாசித்தான்.
ஏனெனில் அவர்கள்
பட்டயத்தால் மடிந்து
போனார்கள்.

சவுல் தாவீதை கொலை செய்ய வகை தேடினாலும், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டதினாலே தாவீது சவுலை கடைசி வரை கனம் பண்ணினான். இப்போது சவுலின் இடத்தில் தாவீதை ராஜாவாக்கி தேவன் கனம் பண்ணினார்.



# தாவீது ராஜா (பாகம் 1)

## தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

1 சாமுவேல் 24-31, 2 சாமுவேல் 1-2

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16